**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பெரியகுளம்.**

**அ.வ.எண். 119/2024**

1873 ம் ஆண்டு சாட்சிய சட்டத்தின் கீழ் இந்நீதிமன்றம் சாட்சி உறுதி செய்யப்பட்டு 11–08–2026 ம் தேதி வாக்குமூலம் பதியப்பட்டது.

பெயர் : **(வா.சா.1 ) திருப்பதிராஜ்** தேதி : 11.08.2026

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து பூர்விக பாத்தியப்பட்டசொத்தை 3 ம் பிரதிவாதிக்கு கிரயம் ஏற்படுத்தி கொடுத்துள்ளதால் அதை ஒப்படைக்க சொல்லி வழக்கு தாக்கல் செய்தேன். நானும், 1 ம் பிரதிவாதியும் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். தாவா சொத்தினை 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து கடந்த 10.06.2024 அன்று 3 ம் பிரதிவாதிக்கு கிரயம் ஏற்படுத்தி கொடுத்து அதன் சுவாதீனத்தை ஒப்படைத்து விட்டனர் என்றால் கிரயம் கொடுத்துள்ளனர், ஆனால் சுவாதீனத்தை ஒப்பபடைக்கவில்லை. 3 ம் பிரதிவாதிக்கு கிரயம் ஏற்படுத்தி கொடுத்த சொத்தை பொறுத்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2) R.M.அழகர்சாமி நாயுடுக்கு பாகபாத்திய சொத்துகளில் தாவா சொத்துகளை தவிர மீதமுள்ள சொத்துகளை அவரது வாரிசுகள் மூன்றாம் நபருக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் மூன்றாம் நபருக்கு கிரயம் கொடுக்கவில்லை, எனது பெற்றோர்கள் தான் கிரயம் பெற்றுள்ளார்கள். R.M.அழகர்சாமி நாயுடு அவர்க்கு பாத்தியப்பட்ட சொத்தை மூன்றாம் நபர்களுக்கும் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். R.M.அழகர்சாமி நாயுடு அவர்க்கு பாத்தியப்பட்ட சொத்தை மூன்றாம் நபர்களுக்கும், எனது பெற்றோர்களுக்கும் எப்போது கிரயம் கொடுத்துள்ளார் என்று சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை, ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

3) R.M.அழகர்சாமி நாயுடு அவர்க்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது வாரிசுகள் மூன்றாம் நபர்களுக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். R.M ராமசாமி நாயுடுவின் பாகசொத்துகள் அவரின் வாரிசுகள் கிரயம் கொடுத்த சொத்து போக மீதமுள்ள சொத்துகள் அவரது வாரிசுகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். R.M ராமசாமி நாயுடுவின் பாகசொத்துகள் எவ்வளவு அளவு என்று குறிப்பிட்டு

சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது, ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். R.M ராமசாமி நாயுடுவின் பாகசொத்துகள் சுமார் 50 ஏக்கர் இருக்குமா என்றால் இல்லை , 15 ஏக்கர் இருக்கும்.

4) கடந்த 14.04.1935 தேதி ஏற்பட்ட பதிவு செய்யப்படாத ஆவணத்தின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அதற்கான பட்டா எண்.196 உள்ளது அதன்படி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 14.04.1935 தேதி ஏற்பட்ட பதிவு செய்யப்படாத ஆவணத்தின் படி 8 இலக்க சொத்துகள் அனைத்தும் R.M. அழகர்சாமி நாயுடுவிற்கும், 6 இலக்க சொத்துகள் R.M. ராமசாமி நாயுடுவிற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் மொத்த சொத்துகள் ஒதுக்கப்பட்டதா என்று தெரியாது, அதில் அளவுகள் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்குறிப்பிட்டுள்ள சொத்துகளை தவிர மீதமுள்ள சொத்துகளும் R.M. அழகர்சாமிநாயுடுவிற்கும், R.M. ராமசாமி நாயுடுவிற்கும் சரிபாதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

5) R.M. ராமசாமி நாயுடு தனக்கு பாகப்பாத்தியப்பட்ட சொத்தை 06.12.1935 அன்று M.S. ஹரிகரஅய்யருக்கு ஈடு வைத்துள்ளார் என்றால் சரிதான் ஒரு பகுதி மட்டுமே ஈடு வைத்துள்ளார். அதே போல் R.M. அழகர்சாமிநாயுடு தனக்கு பாகப்பாத்தியப்பட்ட சொத்தை 17.04.1935 அன்று முத்துகிருஷ்ணன் என்பவருக்கு ஈடு வைத்துள்ளார் என்றால் சரிதான். R.M. அழகர்சாமிநாயுடுவின் வாரிசுகள் பெயர் லிங்கம்மாள் , ராஜம்மாள் என்ற முத்தம்மாள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் அளவுகள் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியும், அளவுகள் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

6) வழக்கு சொத்துகள் R.M. ராமசாமி நாயுடு விற்கோ, அவரது மகன் பிச்சை நாயுடுவிற்கோ ஒதுக்கப்பட்டதாக பதிவு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிவு ஆவணம் எதுவும் இல்லை, ஆனால் கிஸ்தி ரசீதுகள் மற்றும் பட்டாக்கள் தாக்கல் செய்துள்ளேன். R.M. அழகர்சாமி நாயுடுவிற்கு சர்வே எண். 1327/2 எ–க்கு கட்டுப்பட்ட 80 செண்ட் இடமும், சர்வே எண்.1327/5 எ–க்கு கட்டுப்பட்ட 42 செண்ட் இடமும், சர்வே எண்.1333/3 எ–க்கு கட்டுப்பட்ட 12 செண்ட் இடமும், சர்வே எண்.1328/3 க்கு கட்டுப்பட்ட 16 செண்ட் இடமும் மொத்தமாக 1 ஏக்கர் 50 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் தற்போது தான் சப்டிவிசன் செய்யப்பட்டுள்ளது, அப்போது சர்வே எண்ணிற்கான சப்டிவிசன் கிடையாது, ஆனால் 1 ஏக்கர் 50 செண்ட் இடம்

ஒதுக்கப்பட்டுள்ளது. R.M ராமசாமி நாயுடுவிற்கு சர்வே எண். 1327/2 பி–க்கு கட்டுப்பட்ட 22.23 செண்ட், சர்வே எண்.1327/5 பி–க்கு கட்டுப்பட்ட 37.05 செண்ட், சர்வே எண்.1333/1 க்கு கட்டுப்பட்ட 58.05 செண்ட், சர்வே எண்.1333/3–க்கு கட்டுப்பட்ட 46.93 செண்ட் மும் மொத்தமாக சேர்த்து 1 ஏக்கர் 64.26 செண்டாக ஒதுக்கப்பட்டது என்றால் தற்போது தான் சப்டிவிசன் செய்யப்பட்டுள்ளது, அப்போது சர்வே எண்ணிற்கான சப்டிவிசன் கிடையாது, ஆனால் 1 ஏக்கர் 64.26 செண்ட் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. R.M ராமசாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள சொத்துகளை பலநபர்களுக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. R.M ராமசாமி நாயுடு ஹரிஹர அய்யருக்கு எழுதி கொடுத்த 06.12.1935 ஈடு பத்திரத்தில் சர்வே எண்.1327/2 பி, 5 பி சர்வே எண்.1333/3 மற்றும் 3 பி கட்டுப்பட்ட சொத்துகளையும் மற்ற சொத்துகளையும் ஈடு வைத்துள்ளார் என்றால் சரிதான் ஆனால் சப்டிவிசன் அப்போது கிடையாது. எனது வழக்குரையில் R.M. ராமசாமிநாயுடு, R.M அழகர்சாமிநாயுடு எவ்வாறு பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. R.M. ராமசாமிநாயுடு , ஹரிஹரஅய்யருக்கு ஏற்படுத்திய ஈடு பத்திரத்தை கட்டுப்படுத்தி தான் 26.03.2007 அன்று பிச்சைநாயுடுவின் வாரிசுகள் பாகப்பாத்தியம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரியல்ல, பட்டா எண்.196 ன் படி தான் பாகம் செய்து கொண்டார். 26.03.2007 அன்று ஏற்படுத்தப்பட்ட பாகப்பாத்திய பத்திரத்தில் தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 26.03.2007 தேதிய பாகப்பாத்தியபத்திரத்தில் டி ஷெட்யுல் சொத்தில் இரண்டாம் லக்க சொத்தாக 06.12.1935 அன்று ஹரிகரஅய்யருக்கு ஈடு வைத்த சொத்தை பொறுத்து பாகம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அது தவறாகும், பட்டா எண்.196 ன் படி தான் பாகம் செய்து கொண்டார். 26.03.2007 தேதிய பாகப்பிரிவினையின் படி பிச்சைநாயுடுக்கு கிடைத்த எ ஷெட்யுல் சொத்தில் 5 செண்ட் இடத்தை மூன்றாம் நபருக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். எங்களுக்கு பூர்விக பாத்தியப்பட்ட சொத்துகளை பொறுத்து 1935 ல் RM. அழகர்சாமி நாயுடு மற்றும் RM. ராமசாமி நாயுடு அவர்கள் பதிவில்லா பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி பின்பு அதன் அடிப்படையில் தனித்தனியாக அனுபவம் செய்து வந்து தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை ஈடு வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. RM. அழகர்சாமி நாயுடு மற்றும் RM. ராமசாமி நாயுடு ஆகியோர்கள் ஏற்படுத்திய ஈடு

பத்திரத்தின் அடிப்படையில் RM. அழகர்சாமி நாயுடுவின் பேத்தியான சரோஜினி என்ற கோவிந்தம்மாளும், RM. ராமசாமி நாயுடுவின் மகன் பிச்சைநாயுடுவும் பாக சொத்துகளை தண்ணீர் பாசனம் செய்வதற்காக ஏதுவாக இல்லாததால் அவர்களுக்குள் பரிமாற்றம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரியல்ல. RM. ராமசாமி நாயுடுவின் மகன் பிச்சைநாயுடுக்கு சர்வே எண்.1327/2 பி–க்கு கட்டுப்பட்ட 22.23 செண்ட்ம் சர்வே எண்.1327/5 பி–க்கு கட்டுப்பபட்ட 37.05 செண்ட், சர்வே எண்.1333/1 க்கு கட்டுப்பட்ட 58.05 செண்ட், சர்வே எண்.1333/3 பிக்கு கட்டுப்பட்ட 46.93 செண்ட் மொத்தமாக சேர்த்து 1 ஏக்கர் 64 செண்ட் சொத்துகள் கிடைத்து பிச்சைநாயுடுவிற்கு கிடைத்து அவரது பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கான பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. 26.03.2007 பாகப்பிரிவினையின் படி எனக்கு பி ஷெட்யுல் சொத்து பாகமாக கிடைத்தது என்றால் சரிதான். சரோஜினி என்ற கோவிந்தம்மாள் சர்வே எண். 1327/2 எ–க்கு கட்டுப்பட்ட 80.28 செண்ட், சர்வே எண்.1325/5 எ க்கு கட்டுப்பட்ட 42 செண்ட், சர்வே எண்.1333/3 எக்கு கட்டுப்பட்ட 12.35 செண்ட் ம் சர்வே எண்.1328/3 எ–க்கு கட்டுப்பட்ட 16 செண்ட் இடமும் ஒதுக்கப்பட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, R.M.அழகர்சாமிநாயுடுவின் வாரிசுகளுக்கும் சேர்ந்து ஒதுக்கப்பட்டது. R.M.அழகர்சாமிநாயுடுவிற்கு ஒதுக்கபட்ட சொத்துகளை தான் இவ்வழக்கு சொத்துகளாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் இல்லை, கூட்டுப்பட்டாவில் உள்ள சொத்துகளை தான் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 6 வது பாராவில் குறிப்பிட்டுள்ளது போல் 13.09.1962 பத்திரத்தை பொறுத்து எந்த ஒரு பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். அதேபோல் 19.07.1962 தேதி ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து எந்த ஒரு பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி குறிப்பிட்டுள்ள இரு ஆவணமும் தாவா சொத்துகளை கட்டுப்படுத்தி ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளுகிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me/before me in open court on **11-08-2026** and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

RAGUNATH K

District Munsif,
Digitally signed by RAGUNATH K
Location: Periyakulam. Dt. 11.08.2026

District Munsif,
Periyakulam.